1970 ஜனவரி 24]

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU: The Collector has submitted a proposal for the sanction of Rs. 70,000 as an additional allotment to complete the relief work of granting cash to victims of flood to enable them to reconstruct or repair their damaged houses in his district. The Collector's proposal is under consideration.

4. அறிவிப்பு.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசினர் மசோதா. மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.